அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

290—

பத்திரப் பதிவு அலுவலகங்கள்

***7216—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில், வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, முதற்கட்டமாக, 2011–2012 ஆம் நிதியாண்டில், அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12–4–2012–ல், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.26.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்தகட்டமாக, நடப்பாண்டில் அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012–ல் . . .

2013 *ஏப்ரல்* 22]

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *17 இடங்களில் 29 சார்—பதிவாளர் அலுவலகங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியாக 48 சார்—பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு தற்போது துறைவசம் நிலம் தயார் நிலையில் இல்லை. எனவே, மாவட்டப் பதிவாளர் வழியாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. நிலம் கிடைக்கப்பெற்றவுடன், காரைக்குடி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துடன் ஜாயின்ட் 1, ஜாயின்ட் 2 உடன் கூடிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுத் தொகையே, பத்துப்பாட்டே, மொட்டுக் கதவுகளில் தொட்டுவரும் நறுமணமே, நற்றமிழே அம்மா! எப்போதும் எம் வெற்றி உம்மால்தான், அதுவும் நீர் நாவில் நின்றால்தான், நல்வார்த்தை சொன்னால்தான்! பட்டத்தரசியே உன் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இட்டதோர் தாமரை இதழ் விரிந்தாற்போல, வட்டமாய் புறாக்கள்கூடி பகிர்ந்து உண்பதைப் போல, கண்ணியமிகு அரங்கத்தில் காலம் போற்றும் அறிவுச் சுரங்கம் எங்கள் அம்மா! ஆயிரம் காலத்துத் தவம், கேட்காமலேயே கிடைத்த வரம், எங்கள் அம்மா!*

[2013 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட காரைக்குடியில், நம்பர் 1, நம்பர் 2 ஆகிய இரண்டு சார்நிலை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே வெகு நாட்களாக இயங்கி வருகின்றன. இந்தக் கட்டடங்களுக்குத் தேவையான ஒரு ஏக்கர், 50 சென்ட் இடம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் கழனிவாசல் பகுதியிலே தேர்வு செய்யப்பட்டும் இருக்கிறது. ஆகவே, வாடகைக் கட்டடத்திலே இயங்கக்கூடிய இந்தக் கட்டடங்களை அரசுக் கட்டடமாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்க விரும்புகிறேன். மேலும் சர்வே நம்பர் 1ஏ, 9ஏ, சர்வே நம்பர் 65/1 ஆகிய பகுதிகள் சுமார் 500 ஏக்கர் நிலப் பரப்பு கொண்டவை. இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலங்களைப் பட்டா மாறுதல் செய்வதற்கோ அல்லது விற்பதற்கோ, வாங்குவதற்கோ சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தடை விதிக்கப்பட்டு, இன்றளவில் ஏழை எளிய மக்கள் அங்கே 5 சென்ட், 10 சென்ட் வைத்திருப்பவர்கள்கூட அதை விற்கவோ, வாங்கவோ முடியாத சூழ்நிலையில் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கவோ அல்லது திருமணம் செய்யவோ அந்த 5 சென்ட் நிலத்தை விற்றுவிட்டு செய்யலாம் என்று நினைக்கக்கூடிய சூழ்நிலையில்கூட அதை இன்றைக்குப் பட்டா மாறுதல் செய்ய முடியாமல், விற்க முடியாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதையும் உடனடியாக நிவர்த்தி செய்து தந்து, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் புதிதாக இரண்டு சார்பு நிலை அலுவலகங்களுக்கும் கட்டடங்களைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மற்றும் ஜாயின்ட் 1 மற்றும் ஜாயின்ட் 2 இணை சார்–பதிவாளர் அலுவலகம் ஆகியவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. காரைக்குடி பதிவு மாவட்டத்தில் மொத்தம் 10 சார்–பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் அரசுக் கட்டடத்தில் 6 சார்–பதிவாளர் அலுவலகங்களும், தனியார் கட்டடத்தில் 4 சார்–பதிவாளர் அலுவலகங்களும்*

2013 ஏப்ரல் 22]

இயங்கி வருகின்றன. அவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 3 அலுவலகங்களுக்கும் இடம் கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு அம்மாவுடைய அரசு இந்த நிதியாண்டிலேயே நிச்சயமாக கட்டித் தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட உடனே இந்த ஆண்டிலே கட்டித் தருவோம் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 291, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

291—

வீட்டுமனைப் பட்டா

***10275—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கருவந்தா கிராமத்திலுள்ள அருந்ததிய ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*